# மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்

# வத்திராயிருப்பு

CC .No. 134/2024

அ.சா. 4 – பாலமுருகன்

தேதி – 25.11.2025

எதிரி ஆஜர் இல்லை. 317 கு.வி.மு.ச மனு அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் திரு.திலிபன் ஆஜர்.

**<u>சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை : –</u>**

வழக்கின் எதிரி வனராஜை எனக்கு தெரியுமா என்றால் தெரியும் . எதிரி எனக்கு உறவினர் என்றால் சரிதான். எதிரி எனது அப்பாவை தாக்கியதாக ஒரு வழக்கு பதிவு செய்த விபரம் எனக்கு தெரியும் என்றால் தெரியும். இந்த வழக்கின் புகார் ஆனது எனது அப்பா கொடுத்தார் என்றால் சரிதான். எனது அப்பாவை எதிரி தாக்கியதாக சொல்லுகின்ற வழக்கு சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். வழக்கு சம்பவம் எப்போது நடைபெற்றது என்று எனக்கு தெரியுமா என்றால் 18.07.2022. வழக்கு சம்பவம் நடைபெற்றதற்கு மறுநாள் புகார் மனு கொடுப்பதற்கான காரணம் என்ன என்றால் நான் வெளியூரில் வேலை பார்த்து வந்ததால் மறுநாள் புகார் கொடுத்தோம்.

புகார் மனுவினை எனது அப்பா நேரடியாக கொடுக்கவில்லை என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. எனது அப்பா அவருக்கு ஏற்பட்டதாக சொல்லப்படும் காயத்திற்கு மருத்துவமனைக்கு செல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது அப்பா உள் நோயாளியாக மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார். சிகிச்சையில் இருந்தவரை நான் தான் அழைத்துக் கொண்டு காவல் நிலையம் சென்று புகார் மனு கொடுத்தேன். வழக்கு சம்பவம் குறித்து எனக்கு தகவல்

தெரிவித்தது யார் என்றால் செல்வி மற்றும் ஈஸ்வரி. எனது குடும்பத்துக்கும், எதிரியின் குடும்பத்துக்கும் சொத்து சம்பந்தமாக பிரச்சனை ஏற்பட்டு முன் விரோதம் இருந்து வருகிறது என்றால் சரிதான். அந்த சொத்து சம்பந்தமாக எனது தகப்பனாருக்கும் எதிரியின் தகப்பனாருக்கும் அவ்வப்போது வாய்தகராறு ஏற்பட்டது என்றால் நான் வெளியூரில் இருந்து வந்த காரணத்தினால் எனக்கு அது பற்றி எதுவும் தெரியாது.

நான் சொல்வது போல எதிரி எனது அப்பாவை தாக்கி காயப்படுத்தி இருந்தால் அது குறித்து மருத்துவமனையில் விபத்து பதிவேடு பதிவு செய்து அதன் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்திருப்பார்கள் என்று சொன்னால் சரியல்ல. இது வழக்கம் புகாரானது நடைபெறாத சம்பவத்தை மிகைப்படுத்தி பொய்யாக கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. கேட்டு நிலை சாட்சியாக சம்பவத்தை நேரில் பார்க்காமல் நான் நீதிமன்றத்தில் அளிக்கும் சாட்சியமானது ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்று சொன்னால் சரியல்ல. சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் தேதியில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும், பொய்யாக தனிநபரை அழைத்து எனது அப்பாவை அழைத்து புகார் மனு இந்த வழக்கில் கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. முன் விரோதம் காரணமாக எதிரியின் மீது பொய்யாக புகார் மனு கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல

**மறு விசாரணை : – இல்லை .**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒப்பம்.ராமநாதன்.
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு

## மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்

## வத்திராயிருப்பு

CC .No. 134/2024

அ.சா. 5 – முத்துக்குமார்

தேதி – 25.11.2025

எதிரி ஆஜர் இல்லை. 317 கு.வி.மு.ச மனு அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் திரு.திலிபன் ஆஜர்.

<u>**சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை : –**</u>

வழக்கின் எதிரியை எனக்கு தெரியாது. புகார்தாரர் எனது வீட்டுக்கு பக்கத்து வீட்டுக்காரர் ஆவார். புகார்தாரரின் வீட்டுக்கு பக்கத்து வீட்டில் தான் எதிரி குடியிருந்து வருகின்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் கையெழுத்து செய்த பேப்பரில் நிரப்பப்பட்டு தான் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரிதான். நான் கையெழுத்து செய்த பேப்பர் ஏற்கனவே தட்டச்சு செய்து என்னிடம் கையெழுத்து பெறப்பட்டது என்றால் சரியல்ல. நான் கையெழுத்து செய்த பேப்பரில் என்னுடன் வேறு யாரெல்லாம் கையெழுத்து செய்தார்கள் என்றால் சின்னப்பராஜ் என்பவரும் கையெழுத்து செய்தார். காவலர்கள் என்னை விசாரணை செய்துவிட்டு காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் இல்லை. பார்வை மகஜரி்ல் தட்டச்சு செய்த பேப்பரில் பொதுவாக சாட்சிகளின் கையெழுத்து பெறுவது வழக்கம் என்று சொன்னால் என்னிடம் கையெழுத்து எதுவும் பெறவில்லை. எத்தனை மணிக்கு காவலர்கள் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்தார்கள் என்றால் மதியம் 2:30 மணி இருக்கும். மாதிரி வரைபடம் வரைந்ததாக சொல்லப்படும் நேரத்தில் நான் சம்பவ இடத்தில் இருந்திருக்க வாய்ப்பில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் ஏஜென்சி தொழில் செய்து வருவதால்

அன்றைய தினம் நான் என்னுடைய தொழிலுக்கு சென்று இருப்பதால் சம்பவ இடத்தில் நான் இருந்திருக்க வாய்ப்பு இல்லை என்று சொன்னால் சரியல்ல. புகார்தாரருக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கம் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை : – இல்லை .**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒப்பம்.ராமநாதன்.
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு